மැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, නො.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mewatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இல. :PE/2024/03** **2024.09.29**

**பாராளுமன்றத் தேர்தல் - 2024 நவம்பர் 14**
**அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு எதிர்பார்க்கும் வாக்காளர்களுக்கான அறிவித்தல்**

மேற்படி வாக்கெடுப்பின் போது அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு எதிர்பார்க்கும் அனைத்து அஞ்சல் வாக்காளர்களினதும் அஞ்சல் மூல வாக்கு விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் 2024.10.01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2024.10.08 ஆந் திகதியுடன் முடிவடையவுள்ளது. இதற்காக செல்லுபடியான வாக்காளர் இடாப்பாகப் பயன்படுத்தப்படுவது 2024 ஆம் ஆண்டின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2024(1)CR இடாப்பாகும். (2024 ஆம் ஆண்டு சனாதிபதித் தேர்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட இடாப்பு)

பாராளுமன்றத் தேர்தல் தொடர்பாக, அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்குரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள, கடந்த சனாதிபதித் தேர்தலுக்காக அஞ்சல் மூல வாக்கிற்கு விண்ணப்பித்த அனைத்து வாக்காளர்களும் இம்முறை தேர்தலுக்காக மீண்டும் தமது அஞ்சல் மூல வாக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் கட்டாயமானதென்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

அதன் பிரகாரம், தகைமையுள்ள அனைத்து விண்ணப்பதாரர்களுடைய விண்ணப்பங்களும் 2024.10.08 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் உரிய மாவட்டத்தின் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலருக்குக் (மாவட்டத் தேர்தல் அலுவலகம்) கிடைக்கும் வகையில் அனுப்பி வைத்தல் வேண்டுமென்பதுடன், அனைத்து தாபனத் தலைவர்கள், அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள் மற்றும் அஞ்சல் மூல வாக்காளர்கள் அனைவருக்கும் இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
**தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்**

tamilguru.lk